31st March 1969]

(உ) எத்தனை பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 1968-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி வரை தாம்பரத்திலும் தாம்பரம் வட்டாரத்திலும் 20 கொள்ளைகள் நடந்தன.

(இ) இது சம்பந்தமாக எட்டு பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

(உ) எட்டுப்பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

THIRU S. JAYARAMA REDDIAR : With the permission of the Chair, I would like to put a supplementary. . .

MR. CHAIRMAN : On this question?

THIRU S. JAYARAMA REDDIAR : Sir, I want to bring to the notice of the Hon. the Chief Minister certain things in Ramanathapuram district.

MR. CHAIRMAN : That may be done later on.

*Shiv Sena*

* 298 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government of Tamil Nadu have sent any note to the Government of India regarding the sufferings undergone by the Tamilians in Bombay as a result of the activities of Shiv Sena ; and

(*b*) if so, the reply received from them ?

சிவசேனை.

**திரு. வி. தங்கபாண்டியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பம்பாயிலுள்ள சிவசேனையினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட துயரங்கள் குறித்து இந்த அரசு, மத்திய அரசிற்கு ஏதேனும் குறிப்பு அனுப்பியதா ?

(இ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட பதில் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, (அ) பம்பாயிலுள்ள சிவசேனையினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட துயரங்கள் குறித்து இந்த அரசு, மத்திய அரசுக்கு குறிப்புகள் அனுப்பியிருக்கின்றன. இது குறித்து மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(இ) இது குறித்து தமிழ்நாடு அரசுடனும் தமிழக மக்களுடனும் சேர்ந்து தாமும் கவலையுறுவதாகவும், பம்பாய் மாநகரில் மட்டுமல்லாமல் மகாராஷ்டிர மாநிலம் முழுவதும் உள்ள இந்திய மக்கள் அனைவரும் அவர்கள் எப்பகுதியிலிருந்து வந்தவர்களாயினும் ஒற்றுமையாகவும், அமைதியாகவும் வாழ்வதற்கும் பணியாற்றுவதற்கும் வகை செய்ய மகாராஷ்டிர அரசு தன்னால் இயன்றதை யெல்லாம் செய்து வருகின்றது. இனியும் அவ்வாறே செயலாற்றும் என்றும் மத்திய உள்துறை அமைச்சர் வரைந்துள்ளார்.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : May I know whether we are likely to get any compensation for the loss incurred by the Tamilians?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** பொதுவாக நடந்த அந்த அமளியில் ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் அங்கு சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அதில் தமிழர்கள் வசிக்கும் பகுதியில் எவ்வளவு சேதம் என்று தெரியவில்லை. நஷ்ட ஈடு கொடுப்பது சம்பந்தமாக அவர்கள் எந்த வித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவர் அவர்களே, இந்த சிவசேனையை அடக்குவதற்கு செண்ட்ரல் கவர்ன்மெண்டில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? எடுக்க விரும்புகிறார்களா ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி.** சிவசேனையினுடைய அட்டூழியங்கள் பரவாமல் தடுப்பதற்கு மத்திய அரசு மகாராஷ்டிர மாநில அரசுக்கு தாக்கீது அனுப்பியிருக்கிறது.

*Medical College for Tiruchi*

* 308 Q.—THIRU N. R THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the Seshachalam Chettiar Charities have come forward to donate Rs. 5 lakhs for the opening of a Medical College at Tiruchi ; and

(b) if so, whether a Medical College will be opened taking advantage of this offer ?

திருச்சிக்கு ஒரு வைத்தியக் கல்லூரி.

**திரு. என். ஆர். தியாகராஜன்:** மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சியில் வைத்தியக் கல்லூரி நிறுவ சேஷாசலம் செட்டியார் தர்ம நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் கொடுப்பதாகக் கூறியுள்ளனரா ?

(இ) ஆமெனில், இதைப் பயன்படுத்தி வைத்தியக் கல்லூரி நிறுவப் படுமா ?

**மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) அளிக்கப்பட்ட உதவித் தொகையானது போதுமானதாக இல்லாதபடியால் திருச்சிராப்பள்ளியில் ஒரு மருத்துவக் கல்லூரி திறக்க இயலாது. திருச்சிராப்பள்ளியில் மருத்துவக் கல்லூரி திறக்கப்படுவதற்கான செயற்குறிப்பு நிறைவுறும் காலத்தில் அவ்வுதவித் தொகையானது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, திருச்சியில் மருத்துவக் கல்லூரியைத் திறப்பதற்குக் காரணம் பணம் இல்லாததா? அந்த இடத்தைப் பரிசீலனை செய்வதில் தயக்கமா ?

**மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து :** பணம் இல்லை என்பதல்ல. மேலும் ஒரு கல்லூரி திறக்க முடியுமா என்ற பரிசீலனையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை. திருச்சியில் இருக்கிற திரு. எம். எஸ். கிருஷ்ணமூர்த்திச் செட்டியார், சோணாசலம் செட்டியார் சேரிட்டியைச் சேர்ந்தவர்கள் ரூ. 5 லட்சமும், 40 ஏக்கர் நிலமும் இலவசமாகத் தந்து மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். பொது மக்கள் ரூ. 15 லட்சம் நன்கொடை வசூலித்துக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் ஒரு கல்லூரி தேவையா என்பதுதான் இப்போதைய கேள்வியாக இருக்